
# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை



அச்சம், சந்தேகம் மற்றும் அரசியல்ரீதியாக உருவாக்கப்பட்ட அரச பயங்கரவாதத்திலிருந்து விடுபட்ட ஓர் இலங்கையை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா?

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அழிவு மிகுந்த வரலாற்றை அறிந்துள்ள நீங்கள், அனைத்துப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதற்கான பிரசைகளின் அழைப்பை செவிமடுப்பீர்களா?

நீங்கள் “முறைமை மாற்றம்” ஒன்றினை ஆதரிக்கின்றீர்களா?

எமது வரலாற்றைக் கருத்திற்கொண்டு, பெரும்பாலும் அரசியல் செல்வாக்கிற்கு உட்படும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் கைகளில் பரந்த அதிகாரங்களை நீங்கள் வழங்குவீர்களா?

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் தன்னிச்சையான அதிகாரத்தை வழங்குகின்றன

குற்றச்செயல்களின் தெளிவற்ற வரைவிலக்கணங்கள் மக்களின் சுதந்திரத்தை மட்டுப்படுத்துகின்றன. புத்தகமொன்றை எழுதுதல், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், சமூக ஊடகப் பதிவுகளைப் பகிர்தல், ஆர்ப்பாட்டங்களில் பங்குபற்றுதல், பொது இடங்களில் ஒன்றுகூடுதல், உரையாற்றுதல் மற்றும் அமைப்புகளை நடத்துதல் போன்ற செயல்கள் கூட பயங்கரவாதச் செயல்களாகக் கருதப்படலாம்.

கைதிற்கான காரணங்களை அல்லது ஏதேனும் அதிகாரத் துர்ப்பிரயோகத்தை நீதிபதி ஒருவர் நுண்ணாய்வு செய்யாது கைது செய்யப்படுபவரின் தலைவிதி பொலிசாரின் கைகளிலேயே தங்கியுள்ளது.

அரசியல் காரணங்களுக்காக மேற்கொள்ளப்படும் கைதுகள் மற்றும் குடியியல் சுதந்திரங்களை மட்டுப்படுத்தல் ஆகியவற்றினைப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் அனுமதிக்கின்றன. அதிருப்தியை மௌனிக்கச் செய்வதற்கும், எதிர்த்தரப்பினரைத் தூற்றுவதற்கும் அத்துடன் சிறுபான்மையினரைத் தண்டிப்பதற்கும் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு அரசியல்வாதிகளை இது இயலச் செய்கின்றது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் சனநாயகத்தைப் படிப்படியாக அழிப்பதுடன் பாதிக்கப்பட்டோருக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நீடித்த துன்பத்தையும் ஏற்படுத்துகின்றன. இது அச்சத்தையும் சந்தேகத்தையும் தூண்டுவதுடன் சமுதாயங்களிடையே பிரிவினைகளையும் ஏற்படுத்துகின்றது.

# தேசிய மக்கள் சக்தியின் (தே.ம.ச.) வாக்குறுதிகள்

## “பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல்”

“பயங்கரவாதத் தடைச் சட்டம் உள்ளடங்கலான அனைத்து அடக்குமுறைச் சட்டங்களையும் இல்லாதொழித்தல் மற்றும் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்களின் குடியியல் உரிமைகளை உறுதிப்படுத்தல்” என்பவற்றிற்கு தேசிய மக்கள் சக்தி வாக்குறுதியளித்தது.

(*ப.129)

## “நிறைவேற்று சனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல்”

## பகிரங்க சேவையில் “பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தல்”

## “தேசியப் பாதுகாப்பின் பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்பு”

*வளமான நாடு, அழகான வாழ்க்கை, 2024 என்னும் தலைப்பிலான கொள்கைக் கூற்று

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் என்பதன் அர்த்தம் என்ன?

- ❌ “பயங்கரவாதம்” எனப் பரந்ததாக மற்றும் தெளிவற்றதாக வரையறுக்கப்படும் தவறுகள் இனி இல்லை.

- ❌ பரந்ததாக மற்றும் தெளிவற்றதாக வரையறுக்கப்படும் பயங்கரவாதத் தவறுகளுக்காக நபர் ஒருவரைக் கைது செய்வதற்கான பொலிஸ் அதிகாரங்கள் இனி இல்லை

- ❌ விசாரணையின்றித் தடுத்துவைத்தல் (Administrative Detention) இனி இல்லை.

- ❌ சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் பரந்த மற்றும் தெளிவற்ற அதிகாரங்கள் நிறைவேற்று சனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர், பொலிஸ் அல்லது இராணுவத்தினருக்கு இனி இல்லை

- ❌ பலவீனமான மற்றும் வேண்டுமென்றே திரிபுபடுத்தப்பட்ட காப்புகளுடன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள இதே பரந்த மற்றும் தெளிவற்ற தவறுகள் மற்றும் அதிகாரங்களைத் தக்கவைக்கும் புதிய சட்டங்கள் இனி இல்லை



# பயங்கரவாதத் தடைச் சட்டமின்றி, வலிமையான பயங்கரவாத எதிர்ப்புக் கட்ட்மைப்பு ஒன்றினை இலங்கை கொண்டுள்ளது

## - ஒரு பலமான சட்டக் கட்டமைப்பு:

அரசிற்கு எதிரான 13 தவறுகளிலிருந்து தண்டனைச் சட்டக்கோவை அரசைப் பாதுகாக்கின்றது.
2. பயங்கரவாதத்திற்கு உரித்தான ஆகக்குறைந்தது 10 சட்டங்களேனும் காணப்படுகின்றன.
3. தேசியப் பாதுகாப்புடன் தொடர்புட்ட ஆகக்குறைந்தது 15 ஏனைய சட்டங்களேனும் காணப்படுகின்றன.
தனியாட்கள் அல்லது அமைப்புகளை தடை செய்வதற்கான அதிகாரத்தை அரசு ஏற்கனவே கொண்டுள்ளது.

## - ஒரு பலமான நிறுவனம்சார் கட்டமைப்பு

தேசியப் புலனாய்வுச் சேவை
2. பயங்கரவாத விசாரணைப் பிரிவு
3. இலங்கை மத்திய வங்கியின் நிதி அலகு

## சக்திவாய்ந்த ஒரு பொது அவசரகாலச் சட்டம்

1948 இன் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சனாதிபதி பின்வருவனவற்றைப் பிரகடனம் செய்யலாம்:
அவசரகால நிலைமை, அத்தியாவசிய சேவைகள், ஊரடங்கு மற்றும் இராணுவத்திற்கு அழைப்பு விடுத்தல்

அவசரகால நிலைமைகளின்போது, சனாதிபதி, பாராளுமன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டு, தவறுகள் மீதான பரந்த சட்டங்களை ஆக்கலாம், கைதுகள், தடுத்து வைத்தல்கள் போன்றவற்றை மேற்கொள்ளலாம்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான அதிகாரங்கள் மிகையானவை. 40 வருடங்களுக்கும் மேலாக பயங்கரவாதத் தடைச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் கைதுகள், தடுத்து வைக்கப்படுவோரின் மீது ஓர் அழியாத சமூகரீதியான களங்கத்தை ஏற்படுத்துகின்றது.

நல்லிணக்கம் மற்றும் நிறுவனம்சார் மாற்றத்தை நோக்கிய முதல் படியாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் முழுமையான நீக்கம் மற்றும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களுக்கு மறுப்புத் தெரிவித்தல் ஆகியவை தேவைப்படுத்தப்படுகின்றன.

**பொலிஸ், இராணுவம் மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிக்கு மட்டற்ற அதிகாரத்தை வழங்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களை**

# ஆதரிக்க வேண்டாம்

**விடுபாட்டுரிமையற்ற, ஊழலற்ற அல்லது நிறைவேற்று அதிகாரத்தைத் தன்னிச்சையாகப் பயன்படுத்தாத ஓர் இலங்கைக்கான மக்களின் விருப்பினை**

# ஆதரியுங்கள்

LAW & SOCIETY TRUST
නීතිය හා සමාජ භාරය
சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை
www.lst.lk

தொலைபேசி
+94 11 2684845 I +94 11 2691228 I +94 11 2686843
தொலைநகல் - +94 11 2686843

மின்னஞ்சல் - info@lst.lk
முகவரி – 102/3, பான்ஸ் பிளேஸ், கொழும்பு 07